திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த ஸ்பின்னிங் மில் ஏற்படுத்துகிற விஷயத்தில் எல்லா மாவட்டங்களிலும் கொடுத்திருக்கிற லைசென்சுகளை லைசென்ஸ் பெற்றவர்கள் சீக்கிரமாகப் பயன்படுத்தாமல் காலதாமதப்படுத்தி வருகிறார்கள். ஆகவே இவ்வளவு காலத்திற்குள் அந்த மில்லை ஏற்படுத்த வேண்டும், இல்லை என்றால் அந்த மில்லுக்குக் கொடுத்த லைசென்சை ரத்து செய்ய வேண்டுமென்று, அரசாங்கம் லைசென்ஸ்தாரர்களை வற்புறுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதே மத்திய சர்க்கார் லைசென்ஸ் கொடுக்கிற விதிகளை கனம் அங்கத்தினர் அவர்கள் பார்த்தால் தெரியும். ஆறு மாதங்களுக்குள்ளாக உடனடியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள்ளாக இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அதில் கண்டிருக்கிறது. அவ்வாறு எடுக்காவிட்டால் ரத்து செய்வதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

SRI R. PONNAPPA NADAR : Sir, may I know whether there is any proposal to cancel that licence and grant it to some other person because it has exceeded the time-limit?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the Madras Government are very reluctant to cancel any licence. We are anxious that all the licences that are granted to this State should be implemented. We know that there has been delay in the implementation of this licence and the Government are endeavouring their best to see that the licence is implemented.

திரு. டி. கார்ச்சா கவுடர் : எல்லா மாவட்டங்களிலும் நூற்பு மில்கள் அமைப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் நீலகிரி இந்த காட்டிகரியில் வரவில்லை. கோவையில் இருந்து நீலகிரியில் மில் ஆரம்பிக்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விண்ணப்பம் போட்டிருந்தார்கள். அதை அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு கவனித்து இந்த ஆண்டு அங்கு மில்கள் ஏதாவது ஆரம்பிக்க உத்தேசிப்பாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, this is a request. The Government will always bear in mind all the requests made in this House.

Cholera (North Arcot district)

*179 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether information has been received about the incidence of Cholera in North Arcot district;

(b) if so, the details thereof; and

(c) whether accommodation has been made available in all ten taluk hospitals for treatment of Cholera patients?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) 1964 ஆகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையில் அந்த மாவட்டத்தில் காலரா நோயுற்றவர் 411 பேர்கள், அவர்களில் இறந்தவர்கள் 127 பேர்.

(உ) ஆம்.

Women's Organisation (Pudukkottai)

* 180 *Q*.—SRI A. THIAGARAJAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the representatives of various Women's Organisations at Pudukkottai presented any memorandum to the Chief Minister on 7th September 1964, regarding the work relating to the Women and Child Welfare in Pudukkottai; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ), (இ) புதுக்கோட்டையிலுள்ள பல்வேறு மாதர் சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து மனு எதுவும் கிடைக்கவில்லை.

ஆனல் புதுக்கோட்டை, வடக்குராஜ வீதியிலுள்ள மாதர் நல சங்கத்திலிடமிருந்து, 1964 அக்டோபர் 7 தேதியன்று கிடைத்த கோரிக்கைகளடங்கிய மனு, பரிசிலனையிலிருக்கிறது.

திரு. ஆ. துரையரசன்: அந்தக் கோரிக்கைகள் என்னென்ன என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கோரிக்கைகள் பரிசீலனையில் இருக்கின்றன. அது தீர்ந்த பிறகுதான் எது எது என்று கூற முடியும்.

திரு. ஆ. துரையரசன்: பரிசிலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். என்ன கோரிக்கைகள் என்று சபையில் விளக்குவார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பல கோரிக்கைகள் இருக்கின்றன. எது எது என்று கூறுவதற்கு இயலாது. அவைகள் எல்லாம் பற்றி பரிசீலனை முடிந்த பிறகு தனியாகக் கேள்வி ஒன்றை அங்கத்தினர் அவர்கள் போட்டால் கூறப்படும்.

Prohibition of obscene exhibits

* 181 *Q*.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to prohibit exhibition of obscene posters and literature, in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(ஆ) இந்த விஷயம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.